## சுருக்கம்

விடுமுறை - உள்ளூர் விடுமுறை - தஞ்சாவூர் மாவட்டம் - கும்பகோணம் - மாசிமகத் திருவிழாவிற்கு உள்ளூர் விடுமுறை - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பொது (பல்வகைத்) துறை

**அரசாணை (நிலை) எண்.297** **நாள்: 10.05.2023**

சோபகிருது, சித்திரை–27

திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.313, பொது(பல்வகை)த் துறை, நாள்: 11.03.1997.
2. அரசாணை (நிலை) எண்.154, பொது(பல்வகை)த் துறை, நாள்: 03.09.2009.
3. அரசு கடித எண். 8585/ பல்வகை/ 2013–7, பொது(பல்வகை)த் துறை, நாள்: 21.02.2014.
4. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களின் 30.03.2023 நாளிட்ட கடிதம்.

******

**ஆணை :-**

மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளில் மாவட்டங்களில் ஆண்டுதோறும் நடைபெறும் உள்ளூர் திருவிழாக்கள்/ சிறப்பு நாட்களுக்கு உள்ளூர் விடுமுறை அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் அனைத்து மாவட்டங்களுக்கான உள்ளூர் விடுமுறை பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே நான்கில் படிக்கப்பட்ட மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களின் கடிதத்தில், கோயில்களின் நகரமாம் கும்பகோணம் மாநகரில், தென்பாரதக் கும்பமேளா என்று அனைவராலும் அழைக்கப்படும் மாகாமகப் பெருவிழா 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்பட்டு வருகிறது என்றும், குடந்தையில் உள்ள மகாமகத் திருக்குளத்தில் ஒவ்வொரு ஆண்டும் மாசிமகத்தன்று சிறப்பாக நடைபெற்று வரும் மாசிமகத் திருவிழாவை முன்னிட்டு 12 சைவத் திருக்கோயில்கள் மற்றும் 5 வைணவத் திருகோயில்களின் சுவாமிகள், தீர்த்தவாரி செய்வதற்காக வருகை தருகின்றனர் என்றும், இப்பதினேழு சுவாமிகளையும் தரிசனம் செய்வதற்காகவும், மகாமகத் திருக்குளத்தில், புனித நீராடுவதற்காகவும் ஆண்டுதோறும் சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் வருகை புரிகின்றனர் என்றும், ஆயிரக்கணக்கான பக்தர்கள் தம் முன்னோர்களுக்குத் திதி கொடுக்கவும் செய்கின்றனர் என்றும், இந்த வருடம் 06.03.2023 அன்று மாசிமகத்திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

த.பி.பா.

மேலும், இத்தகையப் பெருமை வாய்ந்த மாசிமகத் திருவிழா அன்று உள்ளூர் விடுமுறையாக அறிவிக்க ஆவண செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்றுக் கொண்டு, அவ்வாறே ஆண்டுதோறும் மாசிமகத் திருவிழா அன்று தஞ்சாவூர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவித்து அரசு ஆணையிடுகிறது.

4. இந்த உள்ளூர் விடுறை நாட்கள் செலாவணி முறிச் சட்டம், 1881 (Under Negotiable Instruments Act, 1881)ன் கீழ் அறிவிக்கப்படவில்லை என்பதால், உள்ளூர் விடுமுறை அறிவிக்கும்போது, மாவட்டத்தில் உள்ள கருவூலங்களும், சார்நிலைக் கருவூலங்களும் அரசு பாதுகாப்புக்கான அவசர அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும் என அறிவிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

டி.ஜகந்நாதன்
அரசுச் செயலாளர்

**பெறுநர்**

மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம்.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
அனைத்துத் துறை செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை-9.
கருவூல அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம்.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.

**நகல்**

அனைத்து அரசு நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சியமைப்புகள்.
பிற துறைத் தலைவர்கள்.
செயலாளர், பாரத ஸ்டேட் வங்கி, சென்னை-1.
மேலாளர், இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை-1.
தலைமைத் தபால் அலுவலகம், அண்ணாசாலை, சென்னை-2.
பொது மேலாளர், தென்னக இரயில்வே, சென்னை-3.
மாநில கணக்காயர், சென்னை-34.
மைய ஆயத்தீர்வை ஆண்ணையாளர், சென்னை-1.
உதிரி/இருப்பு கோப்பு.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

16/5/2023

பிரிவு அலுவலர்

16/5/23